2 பாடம்

# தொழுகையில் ஒற்றுமை

**உங்கள் நண்பரோடு எப்போதாவது வாய்ச்சண்டை போட்டிருக்கிறீர்களா? அதற்குப் பிறகு உங்களுக்கு எப்படி இருந்தது? உங்கள் நண்பரோடு சுமூகமாகப் பேசமுடிந்ததா? இயேசுவின் சீடர்கள் பல சமயங்களில் தங்களுக்குள் வாய்ச்சண்டை போட்டுக்கொண்டார்கள். அதன்பிறகு அவர்கள் ஒற்றுமையானார்கள்; எப்படி என்பதைப் பார்ப்போம்.**

இயேசு 12 பேரைத் தம்முடைய சீடர்களாகத் தெரிந்துகொண்டார்; யோவான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபோது அவர்கள் அவரோடு இருந்தவர்கள்; சிலுவையில் அறையப்பட்ட போதும் அவர்கள் அவரோடு இருந்தார்கள். அதுவரை அவர் சொன்ன அருமையான கதைகளையும், கருத்துக்களையும் அவர்கள் கவனித்துக் கேட்டார்கள். இயேசுவோடு அவர்கள் ஆலயம் சென்றார்கள்; வேத வசனத்திற்கு அவர் கொடுத்த விளக்கத்தைக் கேட்டார்கள்; நோயுற்றவரைக் குணமாக்கின போது, அவர்கள் அதையும் பார்த்தார்கள். இயேசு சென்ற இடமெல்லாம் வியாதி இல்லாமல் போனது என்பது அவர்களுக்குத் தெரியும்.

‘ஒருநாள் தான் மரித்துவிடுவேன்’ என்று இயேசு சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை; அவர்கள் புரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. அவர்களுக்கு வேறே திட்டங்கள் இருந்தன. இயேசு இந்தப் பூமியில் ராஜாவாக ஆட்சிசெய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். ரோமர்களை யூதேயாவிலிருந்து அவர் துரத்த வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டார்கள். அப்படி அவர்களைத் துரத்திவிட்டு அவர் ஆட்சி அமைக்கும் போது, தாங்கள்



## மனன வசனம்

**ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.**

**அப்போஸ்தலர் 1:14.**

முக்கியமானவர்களாக இருக்கவும் விரும்பினார்கள்.

யாக்கோபும், யோவானும் இதைப் பற்றிப் பேசுவதற்குத் தங்கள் அம்மாவையே அழைத்து வந்திருந்தார்கள். தங்கள் பிள்ளைகளில் ஒருவன் இயேசுவின் வலதுபுறமும், அடுத்தவன் இடதுபுறமும் உட்காரவேண்டும் என்று அவர்களுடைய அம்மா இயேசுவிடம் கேட்டார். மற்ற சீடர்கள் இதைக் கேள்விப்பட்ட போது கோபப்பட்டார்கள்.

இயேசு உயிர்த்தெழுந்த பிறகு 40 நாட்கள் தம் சீடர்களோடு நேரம் செலவிட்டார். தம்முடைய பிறப்பு, மரணம் ஆகியவற்றைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை அவர்களுக்கு விளக்கினார். தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்.

ரோமரோடு இயேசு சண்டையிடப் போவதில்லை என்பதைக் கடைசியாக அவர்கள் புரிந்து கொண்டார்கள். இயேசு பரலோகம் செல்வார், மீண்டும் வருவார் என்பதையும் புரிந்துகொண்டார்கள்; அவர்களோடு இருப்பதற்கு, பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார் என்பதையும் புரிந்துகொண்டார்கள். இயேசு பரலோகத்திற்குச் செல்வதற்கு முன், பரிசுத்த ஆவி வரும்வரை அவர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டும் என்றார். இப்போது அவர் சொன்னபடி கீழ்ப்படிந்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு பெரிய அறையிலே ஒன்றுகூடி ஜெபித்தார்கள். இயேசு தங்களுக்குக் கற்றுக் கொடுத்ததை நினைவுபடுத்திக் கொண்டார்கள். ஒன்று சேர்ந்து



## செய்தி

***நாம் சேவைசெய்ய ஜெபம் நம்மை ஆயத்தப்படுத்துகிறது.***

ஜெபித்தார்கள். அப்போது முன்னர் அவர்கள் செய்த காரியங்கள் அவர்களுக்கு அருவருப்பாய் தெரிந்தன. அந்தப் பாவங்களை மன்னிக்கும்படி ஜெபித்தார்கள்.

அப்படிக் காத்திருந்த அந்த நாட்களிலே அவர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு. தேவனுக்குச் சேவைசெய்ய ஒருமனப்பட்டார்கள். இயேசுவைப்பற்றிய நற்செய்தியை உலகிற்குச் சொல்லத் தீர்மானித்தார்கள். இயேசு மறுபடியும் வந்து தங்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார், அவரை ஏற்றுக் கொள்கிற அனைவரையும் அழைத்துச் செல்வார் என்பதையும் நம்பினார்கள். அதை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டுமே; ஜெபம் அவர்களை ஒற்றுமைப்படுத்தியது.

அன்பே! உன்னுடைய வாழ்க்கையிலும் ஜெபம் அப்படிப்பட்ட மாற்றத்தை உண்டாக்க முடியும்.

**புதிர் 2**

**செய்முறை:**

*இயேசுவின் சீடர்கள் எந்த அளவிற்கு இயேசுவின்மேல் விசுவாசம் வைத்திருந்தார்கள்? கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தின் ஒவ்வொரு இரண்டாவது எழுத்தையும் அடித்துவிடு. விடையைக் கோட்டில் எழுது.*

**அ ஆ வ இ ர் ஈ க உ ள்**

____________________

**ஜெ க் ப ங் த் அ தி ஆ ல் இ**

____________________

**உ ஈ று உ தி க் யா ஆ ய் இ த் ஈ**

____________________

**த ட் ரி ஞி த் ட் தி ப் ரு மி ந் கி தா டி ர் வி க சி ள் ஓ.**

____________________

